# விவிலியம் – திருக்குறள் உணர்த்தும் அறங்கள்

***முனைவர் தே. ஜெய சோபியா***
உதவிபேராசிரியர்
மரியா பெண்கள் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, வள்ளியூர்

**மலர்: 11**

**சிறப்பிதழ்: 2**

**மாதம்: ஜூலை**

**வருடம்: 2023**

**P-ISSN: 2321-788X**

**E-ISSN: 2582-0397**

**DOI:**
https://doi.org/10.34293/sijash.v11iS2i1-July.6390

***முன்னுரை***

*அறம், பொருள், இன்பம் என்ற மூன்று கோட்பாடுகளால் அமைந்தவை தமிழர்களின் வாழ்க்கை முறை. சமுதாயம் தழைப்பதற்கு அறச்செயல்கள் மிகவும் காரணமாக அமைகின்றது. ஒருவர் சமுதாயத்தில் எவ்வாறு நடக்க வேண்டும். அதாவது பொறாமை, ஆசை, சீற்றம், கடும்சொல், பிறருக்கு உதவாமை போன்ற தீய தன்மைகளை விட்டு விலகி நடப்பதே அறம் என்று திருக்குறளில் வள்ளுவர் எடுத்துரைக்கிறார். விவிலியத்திலும் அறம் என்பது ஒழுக்கம் மற்றும் நற்கிரியைகள் என்ற கண்ணோட்டத்துடன் விளக்கப்படுகின்றன. மேலும் அறம் செய்வதினால் ஏற்படும் மேன்மைகள் குறித்து கட்டுரையில் விளக்கப்பட்டுள்ளன.*

## அறம் - பொருள்

சிறப்புடை மரபிற் பொருளும் இன்பமும் அறத்து வழிப் படூஉம் தோற்றம் போல் *(புறம்-31)* எனக் கோவூக்கிழார் அறம் பற்றி குறிப்பிடுகின்றார். அதாவது அறம் என்னும் சொல்லுக்கு கடமை, தர்மம், கற்பு, புண்ணியம், நற்கிரியை, நோன்பு, ஞானம் என அகராதிகள் விளக்கம் தருகின்றன. அறம் என்பதற்குச் சுருங்கக்கூறின் நல்லவை செய்தலும் அல்லவே கடிதலும் எனலாம், அறம் என்பது எல்லா செயல்களிலும், நீக்கமற நிறைந்து காணப்படும் வாழ்க்கையில் கடைபிடிக்கத்தக்க அறங்களாக திருக்குறளும், விவிலியமும் பல நல்ல பண்புகளையெல்லாம் கூறுகின்றன.அறம் என்பதற்கு ஒழுக்கம் என்றும் பொருள்படும். அறமானது சமூகத்தில் ஒருவர் எவ்வாறு நடக்க வேண்டும் என்பதனை நீதி நூல்களான திருக்குறள் அறிவுறுத்துகின்றது. இதை விவிலியமும் நற்கிரியைகளை செய்தால் தான் மேன்மையான இடத்திற்கு செல்ல முடியும் என்ற கருத்துக்களை பதிவு செய்கிறது. ஆனால் இன்று இளைய தலைமுறையினரை நாம் பார்ப்போமானால் அறம் பற்றிய புரிதல் இல்லாமல் காணப்படுகின்றார்கள்.

## திருக்குறளும் - விவிலியமும்

உலகப் புகழ் பெற்ற இலக்கியமான திருக்குறளில் அறச்செயல்கள் பல காணப்படுகின்றது. அந்தக் கருத்துக்களை விவிலியத்துடன் ஒப்பிட்டுப் பார்க்கும்போது இவ்விரண்டுமே ஒரே செய்திகளை எடுத்தியம்புவதாகவே காணப்படுகின்றது. திருக்குறளில் எடுத்தாளுகின்றதான அறச்செயல்கள் அனைத்தையுமே விவிலியமும் கூறுகின்றது.

விவிலியமும், திருக்குறளும் நற்கிரியைகள் செய்தால் தான் மேன்மையான இடத்தை பெற முடியும் என்ற கருத்துக்களை இயம்புகின்றன. அவ்வாறு நற்கிரியையாகிய அறச்செயல்களை செய்ய வேண்டுமானால் இறைவன் காட்டிய ஒழுக்கநெறியை சமயம் வாய்த்தாலும், வாய்க்காவிட்டாலும், ஒருவன் இதனை செய்தால் தான் வீடுபேறு அடையமுடியுமென்றும், மேன்மையான ஒரு இடத்தைப் பெறமுடியும் என்றும் திருக்குறளும், விவிலியமும் கூறுகின்றது.

**நற்கிரியைகளால் உண்டாகும் புகழ்**

**ஒன்றா உலகத்து உயர்ந்த புகழல்லால்**
**பொன்றாது நிற்பதொன்று இல்"**
**(திருக்குறள் 233)**

நற்கிரியைகள் செய்வதால் ஒருவனுக்கு உண்டாகும் உயர்ந்த புகழை அல்லாமல், உலகத்தில் அழிவில்லாமல் நிலைத்து நிற்பது வேறொன்றுமில்லை. நற்கிரியை செய்வது ஓர் அறச்செயலாகும்.

நீ அதிகாரத்திற்குப் பயப்படாதிருக்க வேண்டுமானால் நன்மை செய். அதனால் உனக்குப் புகழ்ச்சி உண்டாகும். (விவிலியம்-ரோமர் 13:3)

நற்செயல் செய்பவர்கள் அதிகாரிகளுக்கு பயப்பட வேண்டியதில்லை. தீய செயல் செய்பவர்கள் தான் அஞ்சவேண்டும். அதிகாரிகளுக்கு அஞ்சாமல் வாழ விரும்பினால் நன்மை செய்யுங்கள். அப்பொழுது அவர்களிடமிருந்து பாராட்டுக்கள் கிடைக்கும் என்பது விவிலியம் உணர்த்தும் செய்திகளாகும்.

**நிலவரை நீள்புகழ் ஆற்றின் புலவரைப்**
**போற்றாது புத்தேள் உலகு**
**திருக்குறள்-234**

ஒருவன் நிலவரைகளையும் தாண்டி நீண்ட புகழுக்குரிய நற்கிரியைகளைச் செய்து வருவானாயின் மேலுலகம் ஞானிகளிலும் மேலாக அவனையே கனத்துக்குரியதாக மதிக்கும்.

ஒருவன் இவைகளை விட்டு தன்னைச் சுத்திகரித்து கொண்டால் அவன் பரிசுத்தமாக்கப் பட்டதும், எஜமானுக்கு உபயோகமானதும், எந்த நற்கியைக்கும் ஆயத்தமாக்கப்பட்டது மான கனத்திற்குரிய பாத்திரமாயிருப்பான். விவிலியம்:2தீமோத்தேயு 2:21

விவிலியத்திலும், வள்ளுவரின் கருத்துக்கள் இடம் பெறுகிறது. இதில் நற்கிரியைகளை செய்கிறவனை எஜமான் உபயோகமானதும் கனத்திற்குரிய ஒரு பாத்திரமாகவும் மாற்றுவர் என்பதில் எவ்வித சந்தேகம் இல்லை என்பதை வரையறுத்துக் கூறுகின்றது.

**அன்றறிவாம் என்னாது அறஞ்செய்ய மற்றது**
**பொன்றுங்கால் பொன்றாத்துணை**
**திருக்குறள்-36**

இக்குறட்பாவில் வள்ளுவர் ஓயாமல் எந்நேரத்திலும் நாம் அறத்தைச் செய்ய வேண்டும். பொய்தீர் ஒழுக்கநெறியில் நிற்பவர்கள் மற்றவர்களுக்குச் செய்யும் அறம் என்னவென்றால் அறவழியில் நடத்துவதாகும். இவ்வழியில் நடப்பவர்கள் நீடூழி வாழ்வை அடைவார்கள் என குறிப்பிடுகின்றார்.

விவிலியத்திலும் இதே கருத்தினை எடுத்தாளுகின்றது. அதாவது சோர்ந்து போகாமல் நற்கிரியைகளைச் செய்து மகிமையும், கனத்தையும், அழியாமையையும் தேடுகிறவர்களுக்கு நித்திய ஜீவனை அளியார். மன உறுதியோடு நற்செயல் புரிந்து மாட்சிமை, மாண்பு, அழியாமை ஆகியவற்றை நாடுவோருக்கு இந்த நிலையான வாழ்வை வழங்குவார். நீடுழி வாழ்வு என்பது மனிதனின் மரணத்திற்குப் பிறகு ஏற்படும் அதாவது உடல் அழிவிற்கு பின் ஏற்படுவது. ஒருவன் நற்கிரியை செய்வதனால் மரண நேரத்தில் அவன் பயப்படவேண்டியதில்லை. எந்த நேரத்திலும் மரணம் ஏற்பட்டாலும் நித்திய ஜீவனை பெற்றுக் கொள்வார்கள். இதற்கு துணை நிற்பது அவனவனுடைய நற்கிரியைகளே ஆகும். எனவே நற்கிரியையாகிய

*அறத்தை பின்னாளில் செய்துவிடலாம் என்று நினைக்காமல் சமயம் வாய்க்கும் போது எல்லாம், அறமாகிய செயலை செய்தால் தான் பரலோகத்தில் மிகுந்த பலன் கிடைக்கும் என்று விவிலியம் நமக்கு உணர்த்துகின்றது.*

***அந்நியரை உபசரித்தல்***

*விருந்து புறத்ததாத் தானுண்டல் சாவா மாருந்தெனினும் வேண்டற்பாற் றன்று (திருக்குறள்-82) விருந்தினராக வந்தவரை வீட்டுக்கு வெளியே இருக்கையில் வைத்து விட்டு தான் மட்டும் உணவு உண்பது அது சாகமருந்தான அமிழ்தமாருந்தாலும் கூட விரும்பத்தக்க செயல் அல்ல. அது வெறுக்கத்தக்க செயலாகும் என வள்ளுவர் குறிப்பிடுகிறார். முறுமுறுப்பில்லாமல் ஒருவரை ஒருவர் உபசரியுங்கள் (ஐ பேதுரு4:9) நம்முடைய வீட்டிற்கு அந்நியராக யார் வந்தாலும் அவர்களை நாம் முறுமுறுக்கக் கூடாது. அன்பாக உபசரித்து அவர்களுக்கு ஏற்ற ஆகாரம் அளிப்பது தான் உண் மையான உபசரிப்பு என விவிலியம் கூறுகிறது.*

***முகமலர்ச்சியோடு உபசரித்தல்***

***அகனமர்ந்து செய்யாள் உறையும் முகனமர்ந்து***
***நல்விருந்து ஓம்புவான் இல்***
***(திருக்குறள் - 84)***

*அறவழியில் வாழும் மக்கள் கடைபிடிக்க வேண்டிய ஓர் அறநெறி அந்நியரை உபசரிப்பதாகும். உறவினரை மட்டுமல்ல வீட்டிற்கு வருகின்ற எல்லோரையும் உபசரித்து, முகமலர்ச்சியோடு பகிர்ந்து உண்ண வேண்டும் என்று வள்ளுவர் இக்குறட்பாவில் குறிப்பிடுகின்றார்.*

*இதேபோல் விவிலித்திலும் ஆபிரகாம் என்ற மனிதன் தன்னுடைய மனைவி சாராளுடன் மம்ரே என்ற சம பூமியில் ஒரு கூடாரத்தில் தங்கியிருந்த போது முன்பின் தெரியாத மூன்று புருஷர்களைக் கண்டார்கள்.*

*அப்போது ஆபிரகாம் இவர்களை வீட்டிற்கு வருந்தி அழைத்து குடும்பமாய் அவர்களை உபசரித்தார்கள். இதன் பிறகு ஆபிரகாமின் குடும்பத்தில் பல நன்மைகள் நடந்ததாக விவிலியம் கூறுகின்றது.*

*விவிலியத்தில் இயேசுபெருமான் ஒரு உவமையை சொன்னார். ஐசுவரியவானுடைய ஒரு மதிகேடன் தனக்குரிய நிலத்தில் களஞ்சியங்களையும் சேர்த்து வைக்க திட்டமிட்டிருந்தான். தன் ஆத்துமாவிடன் என் ஆத்துமாவே உணக்காக அநேக வருஷங்களுக்கு சேர்த்துவைத்திருக்கிறேன், நீ புசித்து, குடித்து பூரிப்பாயிரு என்று சொன்னான். அப்பொழுது தேவன் அவனை நோக்கி மதிகேடனே இந்த இராத்திரியிலே எடுத்துக் கொள்ளப்பட்டால் நீ சேகரித்து வைத்தவைகளெல்லாம் யாருடையதாகும் என்றார். (லூக12:16-20). எனவே நமக்காக சேர்த்து வைக்காமல் பிறர் நலனுக்காக பல நல்ல அறங்களை எப்போதும் செய்ய வேண்டும் என்றும் விவிலியம் குறிப்பிடுகின்றது.*

***முடிவுரை***

*திருக்குறளின் மகத்துவமும், விவிலியத்தின் மகத்துவமும் ஒன்று போல் இருப்பதை கிறிஸ்தவர்கள் அறியாமல், திருக்குறளை படிக்காமல் வேறு சமயங்களுக்கு கொடுத்து விட்டனர். ஆனால் திருக்குறளில் அடங்கி இருப்பது தோமாவினால் கூறப்பட்ட இரட்சிப்பின் நற்செய்தி. திருக்குறள் வழியாக திருவள்ளுவர் தமிழ் மொழியில் தந்திருக்கிறார்.*

***பார்வை நூல்கள்***

1. *திருக்குறள், க.ப.அறவாணன்*
2. *திருக்குறள், ஞ.கிறிஸ்டோபர்*
3. *புறநானூறு, 31 பாடல் (கோவூர்கிழார்)*
4. *விவிலியம்*